بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/07/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் யுத்தத்தின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில், முஸ்லிம்களால் மக்கத்து காஃபிர்களுக்கு ஏற்பட்ட மதிப்பச்சம் பற்றி குறிப்பிடுகையில், போர் புரிவது குறித்து அபூஜஹ்லுக்கும், உத்பாவுக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடு பற்றி கூறப்பட்டிருந்தது. பிறகு, அபூஜஹ்ல் பரிகாசம் செய்ததனால் உத்பா போருக்கான அறிவிப்பும் செய்தான். இவ்வாறு முறையாக போர் ஆரம்பித்தது.

உத்பா பின் ரபீஆ தன் சகோதரன் ஷீபா பின் ரபீஆ மற்றும் தன் மகன் வலீது பின் உத்பா ஆகிய இருவருக்கும் நடுவிலிருந்து வெளியேறி, வரிசைகளை விட்டும் முன்னால் வந்து, ஒற்றையாகப் போரிட அழைத்தான்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: இதனால் சில அன்ஸாரி இளைஞர்கள் உத்பாவுக்கு பதில் அளிக்கவே, அவன் நீங்கள் யார் என்று கேட்டான். அவர்கள் பதில் கூறியதும், அவன், ‘எங்களுக்கு உங்களோடு எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை; எங்கள் சாச்சாவின் மகன்களுடன் சண்டையிடுவது மட்டும்தான் எங்களுடைய எண்ணமாகும்’ என்று கூறினான். அத்துடன் உரத்த குரலில், ‘முஹம்மதே! (ஸல்) எங்களுடைய உறவினர்களில் எங்களுக்கு சரிசமமான மக்களை எங்களுடன் மோத அனுப்புவீராக’ என்றான்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘ஹம்ஸாவே எழுவீராக! அலீயே எழுவீராக! ஹாரிஸின் மகன் உபைதாவே எழுவீராக!’ என்று கூறினார்கள். (முதலில் அழைக்கப்பட்ட நபர் அன்னாருடைய சாச்சா ஆவார்கள். அடுத்து அழைக்கப்பட்ட இருவரும் அன்னாருடைய சாச்சாவழி உறவினர்கள் ஆவார்கள்.)

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் உத்பாவை நோக்கிச் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ‘நான் ஷீபாவை நோக்கிச் சென்றேன். ஹஸ்ரத் உபைதா (ரலி) அவர்களுக்கும், வலீதுக்கும் இடையில் மாற்றி மாற்றி இரண்டு வாள் வீச்சுகள் ஏற்பட்டன. இருவரும் ஒருவர் மற்றவரை காயப்படுத்தி பலவீனமாக்கி விட்டார்கள். பிறகு, நாங்கள் வலீது

பக்கம் திரும்பி, அவனைக் கொன்று விட்டோம். உபைதாவை நாங்கள் தூக்கிக் கொண்டு வந்தோம்.’

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் தம்முடைய எதிரிகளைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் தம் தோழர் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களைத் தமது படைக்குத் தூக்கிக் கொண்டு வந்த போது அவர்களின் கால் வெட்டுபட்டிருந்தது.

அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன் கொண்டு வந்த போது அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் ஷஹீது இல்லையா?’ என்று பணிவுடன் கேட்டார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், ‘சந்தேகத்திற்கிடமின்றி நீர் ஷஹீதுதான்’ என்று கூறினார்கள். ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்களால் இந்தக் காயங்களிலிருந்து உயிர்தப்ப முடியவில்லை. அவர்கள் பத்ரில் இருந்து திரும்பி வரும் போது வழியில் மரணித்து விட்டார்கள்.

இரண்டு படைகளும் ஒன்றுடன் ஒன்று மோத ஆரம்பித்ததும், அதாவது, கடுமையான போர் ஆரம்பித்ததும், அபூ ஜஹ்ல் இவ்வாறு துஆ செய்தான்: ‘இறைவா! எங்களில் எவர் நெருங்கிய உறவுகளை முறிக்கிறாரோ, மேலும், நாங்கள் இதற்குமுன் ஒருபோதும் கேட்டிராத விஷயங்களைக் கூறுகிறாரோ இன்று நீ அவரை அழித்து விடுவாயாக!’

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது குறித்து இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வு பரிசுத்தமானதாகவும், தூயதாகவும் இருக்கவில்லை என்றே அபூஜஹ்ல் உறுதியாக நம்பினான் என்பது இதிலிருந்து தெரியவருகிறது - நவூதுபில்லாஹ் (அவ்வாறு கூறுவதிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றோம்)

அதனால்தான் அவன் வேதனை மிகுந்த உள்ளத்தோடு துஆ செய்தான். ஆனால், அந்த துஆவுக்குப் பிறகு அவன் ஒரு மணி நேரம் கூட உயிருடன் இருக்க முடியவில்லை. இறைசீற்றம் அந்த இடத்திலேயே அவனுடைய தலையை வெட்டி வீசி விட்டது. எவர்களின் தூய வாழ்க்கை மீது அவன் கறையை வீசினானோ, அவர்கள் அந்தக் களத்திலிருந்து வெற்றியும் உதவியும் கிடைக்கப் பெற்றவர்களாக திரும்பினார்கள்.

முஸ்லிம்களுக்கு முன்னால் அவர்களை விட மும்முடங்கு பெரிய கூட்டம், எல்லா விதமான போர் தளவாடங்களை ஏந்திக் கொண்டு, இஸ்லாத்தின் பெயர் அடையாளத்தையும் அழித்து விட வேண்டும் என்ற உறுதியுடன் போர்க் களத்துக்கு வந்திருந்தது. முஸ்லிம்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தார்கள்தான்: ஆயினும், உண்மையான ஈமான் அவர்களுக்குள் ஓர் அசாதாரணமான ஆற்றலை நிரப்பி விட்டது.

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்டிருந்த முன்னாள் அடிமை ஹஸ்ரத் மஹ்ஜா (ரலி) அவர்கள் ஓர் அம்புக்கு இலக்காக ஆக்கப்பட்டார்கள். அதனால் அவர்கள் ஷஹீது ஆகி விட்டார்கள். இவர்கள்தான் முஸ்லிம்களில் ஷஹீதான முதல் நபர் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் இன்றைய நாள் பொறுமையுடன் நற்கூலியாக கருதி போரிடுவாரோ, புறமுதுகிட்டு ஓட மாட்டாரோ, இறைவன் அவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்வான். இதைக் கேட்ட பனூ ஸலமா கோத்திரத்தைச் சேர்ந்த ஸுபைர் பின் ஹம்மாம் (ரலி) அவர்கள் (அப்போது அவர்களின் கையில் சில பேரீத்தம் பழங்களும் இருந்தன. அவர்கள் அவற்றை உண்டு கொண்டிருந்தார்கள்) அவர்கள் இதைக் கேட்டதும், 'எனக்கும் சுவர்க்கத்துக்கும் நடுவில், இந்த மக்கள் என்னைக் கொன்று விடுவதுதான் உள்ளதா?' என்று கூறி, தமது வாளை ஏந்திக் கொண்டு எந்த அளவு போர் புரிந்தார்கள் என்றால், ஷஹீது ஆகி விட்டார்கள்.

*ஹுஸைர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அஃப்ராவின் மகன் அவ்ஃப் பின் ஹாரிஸ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தன் அடியானின் எந்த விஷயத்தால் மகிழ்ச்சி அடைகிறான்' என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'கவசம் போன்ற போர் ஆடைகள் இன்றி எதிரியைக் கொல்வதனால்' என்று கூறினார்கள். இதனால் அவர்கள் தாம் அணிந்திருந்த கவசத்தைக் கழட்டி வீசி விட்டார்கள். பல காஃபிர்களைக் கொன்ற பிறகு தாமும் ஷஹீது ஆகி விட்டார்கள்.

போர் முடிந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொலையுண்டவர்களுக்கு நடுவில் நின்று, அபூஜஹ்லைத் தேடத் துவங்கினார்கள். அன்னார் அவனைக் காணாததால் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ لَا تُعْجِزْنِیْ فِرْعَوْنَ هٰذِهِ الْاُمَّةِ

பொருள்: 'அல்லாஹ்வே! நீ என்னை இந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்னுக்கு எதிரில் தாழ்த்தி விடாதிருப்பாயாக!'

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கூற்றிற்கு ஏற்ப, அபூ ஜஹ்லை, அவனது கால் முட்டியில் அடிப்பட்டிருந்த காயத்தின் தடயத்தை வைத்து அடையாளம் கண்டு, அவன் காயமுற்றிருக்கும் நிலையில் தேடிக் கண்டுபிடித்து விட்டார்கள். அவனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் உன்னுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்டதற்கு அவன், 'என் கழுத்தை சற்று நீளமாக வைத்து வெட்டி விடு' என்று கூறினான். அவர்கள், 'நான் உன்னுடைய இந்த ஆசையையும் நிறைவேற விட மாட்டேன்' என்று கூறி, அவன் கழுத்தை நாடிக்கு அருகிலிருந்து வெட்டி, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்

(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து அன்னாருடைய காலடியில் போட்டு விட்டார்கள்.

அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும், கூறினார்கள்: اَللّٰهُ الَّذِىْ لَآ اِلٰهَ غَيْرُهٗ அதாவது, அல்லாஹ்வையன்றி வணக்கத்திற்குரியவர் எவருமில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘இறைவா! அவன் உன் பிடியிலிருந்து தப்பி விடக் கூடாது’ என்று துஆ கேட்டதாகவும் ஓர் அறிவிப்பில் வருகிறது.

ஹஸ்ரத் கத்தாதா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு ஃபிர்அவ்ன் இருப்பான். இந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்ன் அபூ ஜஹ்ல் ஆவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அபூ ஜஹ்லை ஃபிர்அவ்ன் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், என்னைப் பொருத்தவரை அவன் ஃபிர்அவ்னை விடக் கொடியவன் ஆவான். ஃபிர்அவ்னோ கடைசி வேளையில், اٰمَنْتُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا الَّذِىْٓ اٰمَنَتْ بِهٖ بَنُوْٓا اِسْرَآءِيْلَ என்று கூறினான். அதாவது, எவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லையோ, எவன்மீது இஸ்ரவேலர்கள் ஈமான் கொண்டுள்ளார்களோ அவன் மீது நான் ஈமான் கொள்கிறேன்.

ஆனால், இவன் கடைசி வரை ஈமான் கொள்ளவில்லை. மக்காவில் இவன்தான் எல்லாக் குழப்பமும் செய்தான். மிகவும் ஆணவமுடையவனாக, சுயநலமுடையவனாக, மதிப்பு, மரியாதையை எதிர்பார்ப்பவனாக இருந்தான்.

இமாம் ராஸீ (ரஹி) அவர்கள் சூரா அன்ஃபாலின் வசனமான

وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى

என்பதற்கு விளக்கவுரை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:- குறைஷிகள் தாக்குதல் தொடுத்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

‘அல்லாஹ்வே! இந்தக் குறைஷிய கோத்திரம் தன்னுடைய குதிரைகள், கர்வமான பொருட்கள் ஆகியவற்றுடனும் உன்னுடைய தூதரைப் பொய்ப்பிக்கும் வகையில், பொய்ப்படுத்தும் வகையில், வந்துள்ளது. அல்லாஹ்வே! நீ என்னிடம் வாக்குறுதியளித்த அந்த விஷயத்தை நான் உன்னிடம் கேட்கிறேன்.’

அப்போது ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கினார்கள். அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உள்ளங்கை நிறைய மணலை எடுத்து அந்தக் காஃபிர்கள் பக்கம் எறிந்து விடுங்கள்’ என்று கூறினார்கள். பிறகு, இரண்டு படைகளும் ஒன்றோடு ஒன்று மோதியபோது, ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உள்ளங்கை நிறைய மணலை எடுத்து காஃபிர்களின் முகங்களை நோக்கி எறிந்து விட்டார்கள். எனவே, இணைவைப்பாளர்கள் தங்களுடைய கண்களை கசக்க ஆரம்பித்தார்கள். அதனால் அவர்கள் தோல்வியைத் தழுவினார்கள்.

பிறகு, அல்லாஹ் கூறுகிறான்: وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ اللَّهَ رَمَىٰ அதாவது, கூழாங்கற்கள் நிறைந்த மணலை நீர் எறிந்த போது, உண்மையில், நீர் அதை எறியவில்லை. ஏனென்றால், நீர் எறிந்திருந்தால், (அதனால்) ஒரு மனிதன் எறிவதனால் ஏற்படும் அளவுக்கே தாக்கம் ஏற்பட்டிருக்கும். மாறாக, அல்லாஹ் அதை எறிந்தான். அதன் விளைவாக அந்த மணலின் துகள்கள் அவர்களின் கண்கள் வரை சென்றடைந்து விட்டன.

ஆக, இந்த மணலை எறிந்த செயல் என்னவோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் நிகழ்ந்தது; ஆனால், அதன் தாக்கம் அல்லாஹ்விடமிருந்து வெளிப்பட்டது.

ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தது, 'தாங்கள் முஸ்லிம்களில் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டவர்களுக்கு என்ன தகுதியை அளிக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'சிறந்த முஸ்லிம்கள்' என்று அல்லது இதே போன்று வேறு ஏதோ ஒரு சொல்லைக் கூறினார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் கூறினார்கள்: இதே போன்று பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட வானவர்களும் சிறந்தவர்கள் ஆவார்கள்.

சில மக்கள், வானவர்கள் இறங்கியது, நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தியாகவும், அவர்களின் மன நிம்மதிக்காகவும்தான் இருந்தது; இல்லை என்றால், வானவர்கள் போரில் செயல்ரீதியாக பங்கெடுக்கவில்லை என்று கருதுகிறார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சிந்தனை சஹீஹான ஹதீஸ்களுக்கு எதிரானது என்று எடுத்துரைத்தார்கள். மேலும், கூறினார்கள்:*

எனினும், உதவி செய்தவற்கு ஒரே ஒரு வானவர் போதுமே, பிறகு, ஆயிரக்கணக்கான வானவர்கள் ஏன் இறங்கினார்கள் என்ற விவகாரம் இங்கு உருவாகிறது. இமாம் இப்னு கஸீர் (ரஹி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: அல்லாஹ்விடமிருந்து வானவர்களின் இறங்குதல் மற்றும் முஸ்லிம்களுக்கு அதைப் பற்றிய தகவல் தெரிவித்தல் ஆகியவை நற்செய்தி வடிவில் இருந்தன. இல்லையென்றால், அல்லாஹ்வால் அது அல்லாமலும் தன்னுடைய எதிரிகளுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவி செய்ய முடியும்.

முழு போர் துவங்கியதும் சிறிது நேரத்திற்குப் பிறகு, இணைவைப்பாளர்களின் படையில் தோல்வி மற்றும் மனக்குழப்பத்தின் தடயங்கள் தென்பட்டன. முஸ்லிம்களின் வலுவான தாக்குதலால் அவர்களுடைய வரிசைகள் சிதறிப் போயின. அவர்கள் ஓட்டம் பிடித்தனர். முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்று அவர்களை பகிரங்கமாகத் தோல்வியுறச் செய்தார்கள்.

இந்தப் போர் இணைவைப்பாளர்களின் தோல்வியிலும், முஸ்லிம்களின் பகிரங்கமான வெற்றியிலும் சென்று முடிந்தது. அதில் (ஆறு முஹாஜிர்கள் மற்றும் எட்டு அன்ஸாரிகள் என மொத்தம்) பதினான்கு முஸ்லிம்கள் ஷஹீதானார்கள். ஆனால், இணைவைப்பாளர்கள் பெரிய இழப்பைக் காண நேரிட்டது. அவர்களுடைய எழுபது பேர் கொல்லப்பட்டார்கள். மேலும், எழுபது பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். அவர்கள் பெரும்பாலும் வழிநடத்துபவர்களாக, தலைவர்களாக மற்றும் கண்ணியத்திற்குரிய(வர்களாக கருதப்பட்ட) பெரும் பெரும் மக்களாக இருந்தார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* சில துஆக்களின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன்.

பாலஸ்தீனத்தின் முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அவர்களுடைய உரிமையை வழங்கக்கூடிய வழிகாட்டிகளை வழங்குவானாக! முஸ்லிம்கள் ஒன்றுபட்டால், இந்த இன்னல்களில் இருந்து வெளிவர முடியும்.

இதே போன்று சுவீடனிலும், மற்ற சில நாடுகளிலும் கருத்து சுதந்திரம், மத சுதந்திரம் என்ற பெயரில் தவறான வேலைகளை செய்பவர்களுக்கு முழு சுதந்திரம் கிடைத்துள்ளது. இதை சாக்காக வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் உணர்வுகளோடு விளையாடி, அன்றாடம் எத்தகைய சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்றால், அவை முஸ்லிம்களின் உணர்வுகளைப் புண்படுத்தக் கூடியவையாக உள்ளன. அல்லாஹ்வே இவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக!

பிறகு, ஃபிரான்ஸின் நிலையைப் பார்த்தால், அங்கும் முஸ்லிம்கள் இலக்காக்கப்படுகிறார்கள். முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கையும் தவறானது. முஸ்லிம்கள் தங்களுடைய செயல்களை இஸ்லாமிய போதனைக்கு ஏற்ப ஆக்கிக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களின் சொல்லும் செயலும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப இருக்கும் போதுதான் வெற்றிகளும் கிடைக்கும்.

உலகம் மிகப் பெரிய அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்று நாம் பல முறை கூறி விட்டேன். அல்லாஹ் கருணை புரிவானாக!

இதே போன்று பாக்கிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)